ஐ.டி.எண். 1/2025 18.02.2026

**தொ.த.சாட்சி -1 திரு.குணசேகரன் குறுக்கு விசாரணை**

எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. ஆனால் என் நிருபண வாக்குமூலத்தில் ஆங்கிலத்தில் தான் தாக்கல் செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து என்னால் பதில் கூற இயலும். எனது நிருபண வாக்குமூலத்தில் நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நான் வேலை செய்வதாக எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். மேலும் என் வேலை சம்மந்தமாக எந்த விவரங்களையும் எனது நிருபண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிர்மனுதாரர் பதில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் நிறுவனம் பிஸ்கட் தயாரிக்கும ் நிறுவனம ் என்றால ் சரிதான். பிஸ்கட ் தயாரிக்கும் பணியில் இருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் ஊதியம் வழங்குவது குறித்து 03.06.2022 அரசாணை வெளியிட்ட விவரம் எனக்கு தெரியாது. 07.11.2025 அன்று பிஸ்கட் தயாரிக்கும் பணியில் இருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் ஊதியத்தை மாற்றி அமைப்பது குறித்து வரைவு அரசாணை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் அகவிலைப்படியை திருத்தி அமைத்து அரசாங்கம் வெளியிடும் அரசாணைகள் பற்றி எனக்கு தெரியாது. 07.08.2023 அன்று எங்கள் யுனியன் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு எங்கள் யுனியனின் லெட்டர் ஹெட்டில் அச்சிட்டு மனு அளித்தோம் என்றால் சரிதான: அந்த ஆவணத்தில் காணப்படும் யுனியனில் பதவி வகிக்கும் நபர்களில் ஆர். ரமேஷ்குமார் என்பவரை தவிர்த்து மற்றவர்கள் அனைவரும் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிகின்றனர். 24.04.2024 அன்று எங்கள் யுனியன் சார்பாக எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு எங்கள் யுனியனின் லெட்டர் ஹெட்டில் அச்சிட்டு மனு அளித்தோம் என்றால் சரிதான் அந்த ஆவணத்தின் 4-வது பக்கத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 100 என்று நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். மேலும் 400 தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடும் என்றும் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தொ.த.சா.ஆவணங்கள் 6 மற்றும் 7-க்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட தீர்ப்புகள் தான் அந்த இரண்டு ஆவணங்கள். தொ.த.சா.ஆ.6 மற்றும் 7-ல் உள்ள

சங்கதிகளை தற்போது என்னால் படிக்க இயலாது. நான் இந்த வழக்கில் கோரியுள்ள கோரிக்கைகும் தொ.த.சா.ஆ-6 மற்றும் 7-ல் உள்ள தீர்ப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் வழக்கிற்காக சம்மந்தப்பட்ட தீர்ப்புகள் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு வருடா வருடம் ஊதிய உயர்வு அளிக்கப்படும் அது குறித்த உத்தரவும் பிறப்பிக்கப்படும் அவ்வாறு 2023, 2024, 2025 ஆண்டிற்கான ஊதிய உயர்வு குறித்த நகல்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் என்றால் சரிதான். அவை **நி.த.சா.ஆ-1 வரிசைகள்.** இதே போன்று அனைத்து வருடங்களும் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்றால் சரிதான். என்னுடைய மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் நிறுவனம் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்குகிறது என்பது குறித்து நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு மாதம் சம்பள ரசீதுகள் வழங்கப்படும் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் சம்பள ரசீதுகள் எனக்கு வழங்கப்பட்ட சம்பள ரசீதுகளின் நகல்கள் என்றால் சரிதான் அவை **நி.த.சா.ஆ-2 வரிசைகள்**. என்னுடைய சம்பள ரசீதில் என்னுடைய பணி நிலை ஆபிசர் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். மேலும் நான் பணி செய்யும் துறை பராமரிப்பு துறை என்று காணப்படுகிறது என்றால் சரிதான். மற்ற தொழிலாளர்களின் சம்பள ரசீதை பார்த்தால் அவர்களின் பணிநிலை என்ன என்று தெரிய வரும் என்றால் சரிதான். என்னுடைய மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் என்னுடைய மற்றும் இதர பணியாளர்களின் சம்பளம் மற்றும் பணிநிலை குறித்து எந்த விவரமும் நான் கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் என்னுடைய தொழிற்சங்கம் இல்லாமல் மேலும் 4 தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன என்றால் சரிதான். இந்த தொழிற்சங்கங்கள் அனைத்தும் வெவ்வேறு அரசியல் கட்சிகளோடு இணைந்து செயல்படும் சங்கங்கள் என்றால் சரிதான். எங்களது தொழிற்சங்கம் பாட்டாளி மக்கள் கட்சியோடு இணைந்து செயல்படும் சங்கம் என்றால் சரியல்ல. 12.11.2024 அன்று எங்கள் யுனியன் லெட்டர் ஹெட்டில் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு நாங்கள் தொழிற்தகராறு மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த லெட்டர் ஹெட்டில் எங்கள் சங்க உறுப்பினர்கள் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் **நி.த.சா.ஆ.3**. எங்கள் தொழிற்சங்கம் தொடங்கப்பட்டு 2 வருடம் ஆகிறது. தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நான் பங்கு கொண்டேன் என்றால் சரிதான். எனது

தொழிற்சங்கம் அல்லாத மற்ற 4 தொழிற்சங்கங்கள் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு 28.08.2023 அன்று எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் ஊதிய உயர்வு குறித்து ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டனர் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். எனது மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் ஊதியம் சம்மந்தமாக அந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பது குறித்து நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மனு அளித்தார்கள் என்றால் சரிதான். அந்த ஊழியர்கள் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். நிர்வாகம் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு அரசியல் வேறுபாடு காரணங்களுக்காக தான் சங்கங்கள் மாறி மாறி கோரிக்கைகளை முன் வைக்கின்றன என்று கூறியது என்றால் சரிதான். உதவி ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது பிஸ்கட் தயாரிக்கும் தொழிலாளர்களுக்கான அரசாங்கம் நிர்ணயித்த குறைந்தபட்சம் ஊதியம் எவ்வளவு என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. என்னுடைய பணிநிலை மேற்பார்வையாளருக்கானது என்றும் அதை கூறினால் என்னால் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடர இயலாது என்பதால் அதனை நான் கூறாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நாங்கள் கோரியுள்ள கோரிக்கைகளுக்கு எந்த அடிப்படை ஆதாரமும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் 150 சதவீத அகவிலைப்படியை எந்த வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் கோருகிறோம் என்றால் சரியல்ல. அதேபோன்று 30 சதவீத ஊதிய உயர்வு எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் நாங்கள் கோருகிறோம் என்றால் சரியல்ல. மேலும் வருடாந்திர ஊதிய உயர்வை நிர்வாகம் அளித்திருந்தாலும் அதனை மறைத்து ஊதிய உயர்வு அளிக்காதது போல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுடைய சம்பளத்தில் வாடகைப்படியும் சேர்த்து நிர்வாகம் வழங்கியுள்ளது என்றால் சரிதான். வாடகைப்படியும் வழங்கியது குறித்து எதுவும் குறிப்பிடாமல் வாடகைப்படியையும் கோருகிறோம் என்றால் சரியல்ல. போனஸ் சட்டத்தின்படி அதிகப்பட்சமாக 20 சதவீதம் தான் வழங்க இயலும் என்றும் நாங்கள் அதையும் அதிகப்படியாக கோருகிறோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு வருடத்திற்கு 2 யுனிபார்ம் செட் நிர்வாகம் அளிக்கும் என்றால் சரிதான். வழக்கில் நாங்கள் கோரியுள்ள மற்ற கோரிக்கைகள் அனைத்தும் சட்டப்படியாக

வழங்கக்கூடியவை அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள கோரிக்கைகள் அனைத்தையும் எங்கள் யுனியன் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து கணக்கிட்டு வழங்க வேண்டும் என்று கோருகிறோம் என்றால் சரிதான். ஆனால் அதுபோன்று பின்தேதியிட்டு சலுகைகள் கோருவதற்கு எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகவும்' தொழிற்சங்கங்களுக்கு இடையே உள்ள பாகுபாடு காரணமாக இவ்வாறு இந்த கோரிக்கையை நாங்கள் வைக்கிறோம் என்றால் சரியல்ல. சட்டத்திற்கு முரணாக இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.02.20 11:47:38 +0530